கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்

பதிவு அலுவலகம்: 27, BKC, C-27, G பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கி), மும்பை-400051. பெருநிறுவன அடையாள எண் - L65110MH1985PLC038137
கிளை அலுவலகம்: சாம்சன் டவர்ஸ் (4ஆவது தளம்), 402, 403, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600008. www.kotak.com

அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் விதிமுறைகளின்படியும் நடைபெற உள்ள அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் / அல்லது அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கடன்தாரர் / அடமானதாரர் ஆன M/s.KFJ கோல்டு அண்டு டைமண்ட்ஸ் பிரைவேட் லிட., மற்றும் / ஜாமீன்தார்களான சஜித் செரியன், கனில் செரியன், தன்யா சுஜித், ஆனியம்மா வல்சா செரியன் ஆகியோரிடமிருந்து கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட் ("ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்") நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ள 24.07.2018 நாளிட்ட கோரிக்கை அறிவிப்புப்படியும் 30.06.2018 நாள்படியுமான ரு.15,72,16,000.00 (ரூபாய் பதினைந்து கோடியே எழுபத்திரண்டு இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) தொகையை அதற்குண்டானதும் தொகை செலுத்தப்படும் / பெறப்படும் நாள் வரையிலானதும் ஒப்பந்த விகிதப்படியான கூட்டு வட்டி முறையிலானதுமான மேல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்துத் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமான கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்டிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 06.10.2021 அன்று நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து(கள்) "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் 25.02.2022 அன்று e-ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

குறிப்பு: 31.01.2022 நாள்படியான இதன் தற்பொழுதைய நிலுவைத்தொகை ரு.24,06,67,980.53 (ரூபாய் இருபத்து நான்கு கோடியே ஆறு இலட்சத்து அறுபத்தேழாயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பது மற்றும் பைசா ஐம்பத்து மூன்று மட்டும்)

ஏலம் விடப்பட உள்ள அசையாச் சொத்துக்கள் விவரம், குறைந்தபட்ச விலை, டேவணித்தொகை (EMD), ஏல விவர அட்டவணை ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

கடன்தாரர் / அடமானதாரர்கள் / ஜாமீன்காரர் பெயர்	E-ஏலத்தில் உள்ள அசையாச் சொத்தின் விவரம்	இணைய வழி ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்ய வேண்டிய கடைசி நாள்	E-ஏல நாள் மற்றும் நேரம்	குறைந்தபட்ச விலை (ரூபாயில்)	டேவணித் தொகை (EMD) (ரூபாயில்)
M/s.KFJ கோல்டு அண்டு டைமண்ட்ஸ் பிரைவேட் திரு.சஜித் செரியன் திரு. கனில் செரியன் திருமதி தன்யா சுஜித் மற்றும் திருமதி ஆனியம்மா வல்சா செரியன்	இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்தாகிய நிலம் மற்றும் கட்டடம், பழைய கதவு எண் 29A, புதிய கதவு எண் 67, மறுசர்வே எண் 1652/7 பாகம், பழைய மறுசர்வே எண் 1652/1, 0.S எண் 1745, C.C எண் 4946, பரப்பளவு 1 கிரவுண்டு 840 சதுரடி. அமைவிடம் - லஸ் தேவாலயச் சாலை, மயிலாப்பூர், சென்னை – 600004. எல்லைகள்: வடக்கு : லஸ் தேவாலயச் சாலை, சர்வே எண் 1653, கிழக்கு : டிசில்வா சாலை, மறுசர்வே எண் 1651, தெற்கு : காலி நிலம், மேற்கு : பழைய எண் 29, புதிய எண் 66, லஸ் தேவாலயச் சாலை, மயிலாப்பூர், மதராஸ் (சென்னை)-600004. இத்துடன் அங்குள்ள அனைத்துக் கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்கள், பொருத்தல்கள், அமைப்புகள் ஆகியவற்றுடன் தற்பொழுது அங்கிருப்பவையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவையுமான தரையோடு இணைந்துள்ள அனைத்து ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் அல்லது தரையோடு இணைந்துள்ள எதனோடும் நிரந்தரமாகப் பிணைக்கப்பட்டுள்ள அனைத்தும் சேர்த்து. இந்தச் சொத்து மயிலாப்பூர் சார்பதிவு மாவட்டத்துக்கும் மத்திய சென்னை பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.	24.02.2022 அன்று மாலை 5 மணி வரை	25.02.2022 https://kotakbank.auctiontiger.net பிற்பகல் 01.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை	ரூ. 8,10,00,000/- (ரூபாய் எட்டு கோடியே பத்து இலட்சம் மட்டும்)	ரூ. 81,00,000/- (ரூபாய் எண்பத்தொரு இலட்சம் மட்டும்)

கீழ்க்கையொப்பமிட்ட நபர், தனது அதிகார வரம்பின் கீழும், வாங்க உத்தேசித்துள்ள நபர்களின் வேண்டுகோளின் பேரிலும் மேற்சொன்ன சொத்தை 18 பிப்ரவரி 2022 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிக்குள் தனது அதிகாரப்பூர்வப் பிரதிநிதி / முகவர் மூலம் ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யலாம்.

முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன :

1. E-ஏல விற்பனை 'ஆன்லைன் மின்னணு ஏலம்' முறையில் வலைதளம் https://kotakbank.auctiontiger.net மூலம் 2022 பிப்ரவரி 25ஆம் தேதி பிற்பகல் 1.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை ஒவ்வொரு முறையும் 5 நிமிட நீள்இயல்பு கால நீட்டிப்புடன் நடத்தப்படும்.
2. மின்னணு ஏல விபரங்களுக்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் M/s. E - Procurement Technologies Limited (Auction Tiger), திரு. ப்ரவீன் தேவர், அலைபேசி எண் : +91-9978591888, மின்னஞ்சல் முகவரி - praveen.thevar@auctiontiger.net / support@auctiontiger.net மை தொடர்பு கொள்ளலாம்.
3. விருப்பமுள்ள ஏலதாரர்கள் ஏல விபரங்களுக்கும், விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வங்கியின் வலைதளம் - https://www.kotak.com/en/bank-auctions.html மை பார்வையிடலாம்.
4. ஏல விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏலதாரர்கள் வலைதளம் https://kotakbank.auctiontiger.net மை படிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் மேற்சொன்ன விதிகள் மற்றும் நிபந்தனைகள் விலைகோரலில் பங்கேற்கும் ஏலதாரர்களை கட்டுப்படுத்தும்.
5. விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளியையும், இதர ஆவணங்களையும் பதிவேற்றம் செய்வதற்கு முன்பே வலைதளம் https://kotakbank.auctiontiger.net யிலிருந்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பெற்றுக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
6. விலைப்புள்ளி படிவம் உரிய வடிவில் நிரப்பப்பட்டு ஏலதாரர்களின் KYC ஆவணங்களுடன் சேர்த்து 2022 பிப்ரவரி 24ஆம் தேதி மாலை 05.00 மணிக்குள் வலைதளம் https://kotakbank.auctiontiger.net மூலம் இணையவழியில் மட்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் / பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் முறையாக நிரப்பப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட விலைப்புள்ளி ஆவணங்கள் மற்றும் ஏலதாரர்களின் KYC ஆவணங்கள் ஆகியவற்றின் ஒளியச்சுப் பிரதிகள் (scanned copies) மின்னஞ்சல் முகவரி: pk.raghuram@kotak.com அல்லது Senthil.KumarA@kotak.com அல்லது ponraj.thangadurai@kotak.com க்கு அனுப்பப்பட வேண்டும். மின்னஞ்சலின் பொருள் பிரிவில் ஏலதாரர் "For purchase of Property in the matter of "M/s KFJ Gold and Diamonds Pvt Ltd" என எழுத வேண்டும்.
7. உத்தேச ஏலதாரர்கள் பயனர் பெயரும் கடவுச்சொல்லும் உருவாக்குதல், இணைய வழி விலைகோரல் நடைமுறையில் பங்கேற்றல் போன்றவற்றுக்கான இணைய வழிப் பயிற்சியை M/s. E - Procurement Technologies Limited (Auction Tiger) யிலிருந்து இதன் மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்களில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
8. டேவணித்தொகையை (EMD) RTGS/NEFT/FUND TRANSFER மூலம் கணக்கு எண். 06410125272001, Kotak Mahindra Bank Ltd., நரிமன் பாயிண்ட் கிளை, மும்பை, IFSC Code: KKBK0000958 எனும் விவரங்களுக்குரிய கணக்கில் 2022 பிப்ரவரி 24ஆம் தேதி மாலை 05.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். டேவணித்தொகையல்லாது விலைப்புள்ளி பெறப்பட்டால் அது தன்னியல்பாகவே நிராகரிக்கப்படும். செலுத்தப்பட்ட டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
9. சமர்ப்பிக்கப்படும் விலைப்புள்ளியானது அடிப்படை விலைக்கு சமமாகவோ மற்றும் / அல்லது அதிகமாகவோ இருக்க வேண்டும். மேலும் விலைகோரல் நடைமுறையில் விலைப்புள்ளிகள் சமர்ப்பித்த ஏலதாரர்கள் தங்களது விலைப்புள்ளிகளை ரூ.1,00,000.00 (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) என்ற மடங்கில் அதிகரிக்க வேண்டும்.
10. மின்னணு ஏல நடைமுறை முடிவுறும் கடைசி 5 நிமிடத்தில் விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டால், முடிவு நேரம் தன்னியல்பாகவே உடனடியாக அடுத்த 5 நிமிடத்துக்கு நீட்டிக்கப்படும்.
11. வெற்றி பெற்ற ஏலதாரர் மின்னணு ஏல விற்பனை நடைமுறை முடிவடைந்ததும் உடனடியாக உச்சபட்ச ஏல விலையில் 25% யை (ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) மேற்குறிப்பிட்ட வகையில் செலுத்த வேண்டும். ஒருவேளை மின்னணு ஏல நாளில் அலுவல் நேரம் அதற்குள் முடிவடைந்து விட்டால் இத்தொகையை அடுத்த வேலை நாளில் செலுத்தி விட வேண்டும். உச்சபட்ச ஏல விலையின் மீதி 75% தொகையை விற்பனை ஏற்றுக்கொள்ளப்பட்ட / உறுதிப்படுத்தப்பட்ட தகவல் வெற்றி பெற்ற ஏலதாரருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 15ஆவது நாள் அல்லது SARFAESI சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து விதிகள் 2002-இன்படி அதிகாரப்பூர்வ அலுவலரின் அதிகாரத்தின் கீழ் நிட்டிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்தப்பட வேண்டும்.
12. மொத்த ஏலத் தொகையும் இதர செலவினங்களும் பெறப்படுதலின் பேரில், உச்சபட்ச ஏலதாரரின் பெயருக்கு விற்பனைச் சான்று வழங்கப்படும் வரை சொத்து மீது எந்த உரிமையோ அல்லது சொத்துரிமையோ அவருக்கு இல்லை. விற்பனையானது மின்னணு ஏலத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் உறுதிப்படுத்துதலுக்கும் உட்பட்டது.
13. வெற்றி பெற்ற ஏலதாரர் மொத்த விலைப்புள்ளி / ஏலத் தொகையையும் செலுத்தத் தவறினால் அன்னாரால் ஏற்கெனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படுவதோடு, சொத்துக்கள் அல்லது செலுத்தப்பட்ட தொகை ஆகிய எதன் மீதும் தவறிழைத்த ஏலதாரருக்கு எந்த உரிமைகோரலும் கிடையாது. மேலும் அதிகாரப்பூர்வ அலுவலர் SARFAESI சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து அமலாக்கம் விதிகள் 2002 ஆகியவற்றின் கீழ் ஏலச் சொத்து/க்கள் மீது எந்த ஒர் உரிமையையும் அல்லது அதற்கு மேற்பட்ட உரிமைகளையும் செயலுறுத்த உரியுடையவராவார்.
14. மேற்குறிப்பிட்டபடி உரிய காலக்கெடுவுக்குள் மொத்த விலைத்தொகையும் பெறப்பட்டதன் பேரில் அதிகாரப்பூர்வ அலுவலர் விற்பனைச் சான்றை வழங்குவதோடு விற்பனை முடிவடைகிறது. அதற்குப் பிறகு கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட் எந்த உரிமைகோரலையும் அனுமதிக்காது.
15. விற்பனைச் சான்றானது விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்ட பெயரிலேயே வழங்கப்படும். விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்ட பெயரைத் தவிர, எந்த நபரின் (நபர்களின்) பெயரையும் விற்பனைச் சான்றில் சேர்க்க / மாற்ற வேண்டி வரும் எந்தக் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
16. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகை கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்டால் அவரவரது கணக்குகளுக்கு RTGS / NEFT / Funds Transfer மூலம் எந்த வட்டியுமின்றி 10 (பத்து) நாட்களுக்குள் திருப்பித் தரப்படும்.
17. அதிகாரப்பூர்வ அலுவலர், விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க மற்றும் எக்காரணமும் கூறாமல் மின்னணு ஏல விற்பனை நடைமுறையை ஒத்தி வைக்க / ரத்து செய்ய உண்டான அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளவராவார். விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு மின்னணு ஏலம் ஒத்தி வைக்கப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால், ஏலதாரர்களால் செலுத்தப்பட்ட டேவணித்தொகைகள் எந்த வட்டியுமின்றித் திருப்பித் தரப்படும். விலைப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டால், அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த ஏலதாரர்களிடமும் / நபர்களிடமும் தனியார் ஒப்பந்தம் மூலம் சொத்தை விற்பனை செய்ய போம் பேசலாம்.
18. ஏதேனும் ஏலதாரர் ஏலத்திற்கு விடப்பட்ட சொத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட சொத்திற்கு விலைகோர விரும்பினால், அவர் மேற்குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றி ஒவ்வொரு சொத்துக்கும் தனித் தனியாக விலைப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டும்.
19. மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் யாவும், அதிகாரப்பூர்வ அலுவலருக்கு / ஈடு பெற்றுக் கடனளித்தவருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையில் கூறப்பட்டவையாகும். எனினும் இவ்வறிவிப்பில் ஏதேனும் பிழையோ முரண்பாடோ விடுபாடோ இருப்பின் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலர் பொறுப்பல்ல.
20. இதர வில்லங்கம் ஏதும் இருப்பதாக வங்கிக்குத் தெரியவில்லை. ஏலத்திற்கு விடப்பட்டுள்ள சொத்து மீது ஏதேனும் கடன் பொறுப்போ பற்றோ வில்லங்கமோ அல்லது அரசுக்கோ பிறருக்கோ செலுத்த வேண்டிய நிலுவைகளோ இருந்தால் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலரோ வங்கியோ பொறுப்பல்ல. விருப்பமுள்ள ஏலதாரர்கள் சொத்தின் மீதான சட்டப்படியான பொறுப்புகள், சொத்து வரி நிலுவைகள், மின் கட்டண நிலுவைகள் முதலான வில்லங்கங்கள் குறித்தும் தாங்களே தனிப்பட்ட முறையில் விசாரணைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
21. பதிவுக் கட்டணங்கள், முத்திரை தீர்வை, வரிகள் போன்ற சட்டரீதியிலான நிலுவைகள் / இதர நிலுவைகள் அனைத்தையும் வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
22. இவ்வறிவிப்பின் கீழ் ஏல விற்பனைக்கு விடப்படும் சொத்து மீதான நகராட்சி வரிகள், பராமரிப்பு / சமூகக் கட்டணங்கள், மின்சார மற்றும் தண்ணீர்க் கட்டணங்கள் ஆகிய அனைத்து வெளிக் கட்டணங்களையும் இதர நிலுவைகள் அல்லது பரிமாற்றக் கட்டணங்கள் உள்ளிட்ட வரிகள் ஆகியவற்றையும் ஏலதாரர் / வாங்குபவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
23. அனைத்து இதர கட்டணங்கள் (பிணைக்கட்டணம் அல்லது தற்போதைய ஏலத்தில் உள்ள சொத்தை பாதுகாப்பதற்கான பராமரிப்பு கட்டணம் மட்டுமல்லாது இதர கட்டணங்கள் போன்றவற்றை விற்பனைச் சான்று வழங்கிய தேதியிலிருந்து உச்சபட்ச ஏலதாரரே ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனை விற்பனைச் சான்று பதிவு செய்யப்படுவதற்கு முன்பு ஏலதாரர் வங்கிக்குச் செலுத்த / திருப்பி தர வேண்டும். எனினும் தாமதத்துக்கு ஏதேனும் நியாயமான மற்றும் பொருத்தத்தக்க காரணங்கள் இருப்பின், அதிகாரப்பூர்வ அலுவலரின் அதிகார வரம்பில் விதிவிலக்குக்குப் பரிசீலிக்கப்படும். ஆனால் அது வருங்காலத்துக்கான முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாத வகையிலானது.
24. வருமான வரிச் சட்டம் 1961, பிரிவு 194-A-இன்படி விற்பனை விலை ரூ.50,00,000.00 (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) அல்லது அதற்கு மேலானதாக இருப்பின் விற்பனை நடைமுறைக்கு 1% வழங்குமிடத்துப் பிடித்த வரி (TDS) பொருந்தும். வெற்றி பெற்ற ஏலதாரர் / வாங்குநர் விற்பனை தொகையில் 1% வழங்குமிடத்துப் பிடித்த வரியாகக் கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட், பெயரில் கழித்துக் கொண்டு அதனை வருமான வரித் துறைக்குச் செலுத்துவதோடு அந்த வரியைச் செலுத்தியதற்கான சான்றாக அதன் சலானையும் 26QB படிவத்தையும் / வழங்குமிடத்துப் பிடித்த வரிச் சான்றையும் கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட், நிறுவனத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.
25. விற்பனையானது கட்டாயமாக "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் இதில் குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் நடத்தப்படும். எனினும் அதிகாரப்பூர்வ அலுவலர், விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற அல்லது திருத்த உரிய அதிகாரத்தை கொண்டுள்ளவராவார். ஏலதாரர்கள் தமது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, சம்பந்தப்பட்ட சொத்து தொடர்பான வில்லங்கங்கள் தொடர்பாக தமது சொந்த விசாரணைகளை மேற்கொண்டு, சார் பதிவாளர் அலுவலகத்திலும் வருவாய் ஆவணங்களிலும் நகராட்சி ஆவணங்களிலும் இதர அரசு நிர்வாக ஆவணங்களிலும் தேடி சொத்தின் தன்மை, சொத்து விபரம், நிலை மற்றும் ஏதேனும் வில்லங்கம், கடன், பற்று, சட்டப்படியான நிலுவை போன்றவை உள்ளனவா என விசாரித்து தம்மனவில் திருப்தி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
26. வங்கிக்கான நிலுவைகளை அனைத்துச் செலவுகள் மற்றும் இதர கட்டணங்கள் மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர செலவுகள் அல்லது அதன் ஒர் பாகம் (வங்கி ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில்) ஆகியவற்றுடன் கடன்தார்/கள் / ஜாமீன்தார்/கள் / அடமானதார்/கள் சார்பில் / அவர்களால் விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பு எந்த நேரத்தில் செலுத்தப்பட்டாலும், ஏலம் / விற்பனை ரத்து செய்யப்படலாம். அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த நேரத்திலும், எக்காரணமும் கூறாமல், எந்த விலைப்புள்ளியையும் ஏற்றுக் கொள்ளவும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாதவையாகக் கருதும் பட்சத்தில் அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்கவும் அல்லது ஏலத்தை ஒத்தி வைக்க / ரத்து செய்ய / தள்ளி வைக்க / இடைநிறுத்த அல்லது ஏலத்தின் நிபந்தனைகளை மாற்ற உண்டான அதிகாரத்தை கொண்டுள்ளவராவார். இவை தொடர்பாக அவரது முடிவே இறுதியானது.
27. ஏலதாரர்கள் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை படித்துப் புரிந்து கொண்டதாகவே கருதப்படுவர். மேலும் மேற்சொன்ன விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களாவர்.
28. ஏலதாரர்கள் முறையான இன்டர்நெட் தொடர்பு, மின் தேக்கி போன்றவை உள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மின்னணு ஏல நடைமுறையைப் பாதிக்கும் இன்டர்நெட் தொடர்பிழப்பு, மின் தடை அல்லது தொழில்நுட்ப காரணம் / காரணங்கள் / இடையூறுகளுக்கு வங்கி பொறுப்பல்ல.
29. ஏலத்திற்கு விடப்படும் சொத்து மீது எந்த நபரிடமிருந்தும் வரும் எந்த விதமான உரிமைகோரலுக்கும் கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட் அல்லது அதன் பணியாளர் பொறுப்பல்ல.
30. தற்போதைய இந்த அறிவிப்புக் வங்கியின் அலுவல் ரீதியான வலைதளம் www.kotak.com-இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விருப்பமுள்ள நபர்கள் அதனை பார்வையிடலாம்.
31. மேலும் விபரங்களுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் திரு. A.செந்தில் குமார் (அலைபேசி எண். 7358709559), திரு. T.பொன்ராஜ் (அலைபேசி எண் 9884283338), திரு. வருண் வேத்சாகர் (அலைபேசி எண் 8088113898) மற்றும் திரு. G.K. ரகுராம் (அலைபேசி எண் 9899276269) ஆகியோரை தயவு கூர்ந்து தொடர்பு கொள்ளவும்.

கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதிகள் 6(2), 8(6), 8(7) & 9(1)-இன் கீழான சட்டரீதியிலான 15 நாள் விற்பனை அறிவிப்பு

கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தார்களுக்கு / அடமானதார்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்குறிப்பிட்டுள்ள நிலுவைகளை நாளது தேதி வரையிலான வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து நாட்களுக்குள் முழுமையாக செலுத்தி, கடன் பொறுபை முழுமையாக ஆற்றிட வேண்டும். தவறும் பட்சத்தில் 'கடனீட்டுச் சொத்து' (மேற்குறிப்பிட்டது) மேற்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை செய்யப்படும். ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிச் செய்தித்தாள்களில் வெளியாகும் இந்த விற்பனை அறிவிப்பின் வெளியீடுகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு இருப்பின், ஆங்கிலச் செய்தித்தாளில் உள்ள விவரங்களே முடிவானவை. மேலும் அவையே குழப்பங்களை போக்கும் இறுதியான விவரங்களாக கருதப்படும்.

இடம் : சென்னை
தேதி : 09.02.2022

கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்-சார்பில்
ஒம்/-, அதிகாரப்பூர்வ அலுவலர்